செ.வெ.எண்: 87 தேதி 26:01:2011

செய்தி வெளியீடு

புதிய தலைமைச் செயலகம், தொழிலாளர் நல அமைச்சர் அலுவலகத்தில் முதல் நிகழ்ச்சி ஈ.எஸ்.ஐ. மருத்துவ அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

கோட்டையிலிருந்து, சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய தலைமைச் செயலகத்திற்கு தனது அலுவலகத்தை இன்று (26.1.2011) மாற்றி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் அவர்கள், தனது அலுவலகத்தின் முதல் அரசு நிகழ்ச்சியாக தொழிலாளர் துறை பகுதி–2 திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட மடிக்கணினிகளை ஈ.எஸ்.ஐ. மருத்துவ அலுவலர்களின் நிர்வாக வசதிக்காக வழங்கினார். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட இயக்குநர் டாக்டர் வேலுச்சாமி, கோவை மண்டல அலுவலர் டாக்டர் தாராதேவி, சேலம் மண்டல ஆர்.எம்.ஓ. டாக்டர் சம்பத் குமார், சென்னை ஆர்.எம்.ஓ., டாக்டர் டாக்டர் இந்திர குமாரி, இணை இயக்குநர் (பணியமைப்பு) டாக்டர் லட்சுமி, துணை இயக்குநர் (ஈஎஸ்.ஐ.), டாக்டர் கார்த்திகேயன் ஆகியோர் அமைச்சரிடமிருந்து நேரில் பெற்றுக் கொண்டனர்.

2006–2011 ஆம் நிதி ஆண்டுகளில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை மேம்படுத்த ரூ. 3.50 லட்சம் நிர்வாக வசதிகளுக்காக மடிக்கணினிகள் வாங்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் பேறுகால உதவி, காப்பீட்டு நபர் குடும்பத்திற்கு உதவி, வேலை இழந்தோருக்கான உதவி, காப்பீட்டு நபர் இறந்தால் இறுதி சடங்கிற்கு உதவி போன்றவை தமிழ்நாட்டிலுள்ள 9 ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. ஈ.எஸ்.ஐ. சார்பில் 184 மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகங்கள் செயல்படுவதோடு 2363 படுக்கைகளை கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் டி.பிரபாகரராவ், இ.ஆ.ப., தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் திரு டி. அய்யனு , தொழிலாளர் இணை ஆணையர்கள் உட்பட பலரும் பங்கேற்றனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9